பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 6
ஆசிரியர் அறிமுகம் 13
வரவேற்புரை 25
1 சிறப்புரை 27
2 நான் மாணவனே! 30
3 அறிஞர்கள் யார்? 33
4 கல்வி எனப்படுவது? 36
5 நபித்தோழர்கள் யார்? 39
6 குழப்பங்களுக்கு ஒரே தீர்வு! 44
7 ஸுன்னா அந்தஸ்து 50
8 நபிவழியின் சொல் விளக்கம் 53
9 நபிவழியின் செயல் விளக்கம் 55
10 நபிவழியின் அங்கீகாரம் 56
11 பல கூட்டங்கள் எப்படி உருவானார்கள்? 62
12 திரிபுவாதக் கூட்டங்கள் 64
13 காதியானிகளின் திரிபுவாதம் 70

2

நான் மாணவனே!

❊

உண்மையைச் சொல்கிறேன். இதனுடன் சேர்த்து இன்னொன்றை யும் உங்களுக்குச் சொல்ல வேண்டும். நமது கண்ணியமிகு சகோதரர் இப்றாஹீம் சற்று முன்பு கூறியதைப் போன்ற மனிதர் அல்ல நான். மாறாக, கல்வியைத் தேடும் மாணவன் என்பதைத் தவிர சொல்வதற்கு எதுவுமில்லை.

மாணவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு நபிமொழியைச் சொல்கிறேன். அது என்னவெனில்,

بَلِّغُوْا عَنِّي وَلَوْ آيَةً وَحَدِّثُوا عَنْ بَنِي إِسْرَائِيلَ، وَلاَ حَرَجَ، وَمَنْ كَذَبَ عَلَيَّ مُتَعَمِّدًا فَلْيَتَبَوَّأْ مَقْعَدَهُ مِنَ النَّارِ

‘என்னிடமிருந்து ஒரேயொரு செய்தி கிடைத்தாலும் அதைப் பிறருக்கு எடுத்துச் சொல்லுங்கள். இஸ்ரவேலர்களின் வழியாகக் கிடைத்த செய்திகளையும் அறிவியுங்கள். அதனால் குற்றமில்லை.[5]

---

5 பனீ இஸ்ராயீல். இஸ்ரவேலர்கள் என்றால் யூதர்கள். கிறித்துவர்களைக் குறிக் கும். இன்றும் அவர்களது வேதங்களில் நபிமார்களின் செய்திகள் பல இருக்கின்றன. அவற்றை அறிவிப்பது குறித்து இமாம் இப்னு கஸீர் ﷺ எழுதியுள்ள விளக்கமாவது: இந்த இஸ்ரவேலர்களின் செய்திகள் (ஏற்கனவே உறுதியான ஒன்றை மேலும்) உறுதிப்படுத்த எடுத்துக்காட்டலாமே தவிர, (நிரூபிக்கப்படாத ஒன்றுக்கு) ஆதாரமாக அவற்றைக் கூறக்கூடாது. இத்தகைய யூதக் கதைகளை மூன்று வகைப்படுத்தலாம்: ஒன்று: நம் கைவசமுள்ள ஆதாரங்கள் மூலம் உண்மை எனக் கண்டறியப்பட்ட செய்திகள். இவை சரியானவை ஆகும். இரண்டு: நம் கைவசமுள்ள ஆதாரங்கள் மூலம் பொய் எனக் கண்டறியப்பட்ட செய்திகள். இவை நிராகரிப்பட்டவை ஆகும். மூன்று: சரியானவை என்றோ. தவறானவை என்றோ சொல்லப்படாத செய்திகள். இத்தகைய செய்திகளை நாம் உண்மை என்று நம்பவுமாட்டோம்; பொய் என்று நிராகரிக்கவுமாட்டோம். இச்செய்திகளை எடுத்துரைப்பது செல்லும்.

3

அறிஞர்கள் யார்?

❊

ஆனால், அல்லாஹ்வுக்குத் தெரியும், 'இவர்தாம் அறிஞர்' என்று சரியாகச் சொல்லப்பட்ட மிகமிக அரிய மனிதர்கள் இல்லாமல் போயிருந்தால், இந்த முஸ்லிம் உலகமே அழிந்திருக்கும் என்று.

அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னு அல்ஆஸ் ﷺ அறிவித்து இமாம் புகாரீ ﷺ பதிவு செய்துள்ள நபிமொழியில் இருக்கிறது இக்கருத்து.

إِنَّ اللَّهَ لاَ يَقْبِضُ الْعِلْمَ انْتِزَاعًا يَنْتَزِعُهُ مِنَ الْعِبَادِ وَلَكِنْ يَقْبِضُ الْعِلْمَ بِقَبْضِ الْعُلَمَاءِ حَتَّى إِذَا لَمْ يُبْقِ عَالِمًا اِتَّخَذَ النَّاسُ رُؤُوْسًا جُهَّالاً فَسُئِلُوْا فَأَفْتَوْا بِغَيْرِ عِلْمٍ فَضَلُّوْا وَأَضَلُّوْا

அடியார்களிடமிருந்து கல்வியை அல்லாஹ் ஒரேயடியாகப் பறித்து கைவசப்படுத்திடமாட்டான். ஆயினும், அறிஞர்களைக் கைப்பற்றுவதன் மூலமே கல்வியைக் கைப்பற்றுவான்.இறுதியில் எந்த அறிஞரையும் விட்டுவைக்கமாட்டான். மக்கள் அப்போது மூடர்களைத் தலைவர்களாக ஆக்கிக்கொள்வார்கள். அத்தலைவர்களிடம் கேள்விகள் கேட்கப்படும். அவர்கள் எந்த அறிவுமில்லாமல் மார்க்கத் தீர்ப்பு வழங்குவார்கள். எனவே, தாங்களும் வழிகெட்டு மற்றவர்களையும் வழிகெடுப்பார்கள். *(புகாரீ 100)*

அல்லாஹ் கல்வியை எடுத்துவிட நாடினால், அதை அறிஞர்களின் உள்ளங்களிலிருந்து எடுத்துவிடமாட்டான். அதாவது, எதையுமே கற்றிருக்காத பாமர மனிதராக அறிஞர் மாறிவிடமாட்டார். தன் அடியார்களை அணுகுவதில் அல்லாஹ்வின் நடைமுறை இதுவல்ல. குறிப்பாக, கல்வியை அல்லாஹ்வின் திருப்தியை நாடித்தேடிய நல்லடியார்கள் விசயத்தில் அவன் அப்படி நடந்துகொள்ளமாட்டான். அவர்களிடமிருந்து அதைப் பறித்துவிடமாட்டான். அல்லாஹ் தன் சட்டங்களில் நீதி நேர்மை மிக்கவன். உண்மையான அறிஞர்களின் உள்ளங்களிலிருந்து கல்வியை எடுத்துவிடமாட்டான்.

4

கல்வி எனப்படுவது?

❊

ஒரு நபிமொழி கூறுகிறது.

مَنْ سَلَكَ طَرِيقًا يَلْتَمِسُ فِيهِ عِلْمًا سَهَّلَ اللَّهُ لَهُ بِهِ طَرِيقًا إِلَى الْجَنَّةِ

யார் கல்வியைத் தேடி ஒரு பாதையில் நடக்கிறாரோ அவருக்கு அதன் மூலம் சொர்க்கத்திற்குச் செல்லும் பாதையை அல்லாஹ் எளிதாக்குகிறான். (அறிவிப்பு: அபூ ஹுரைரா ﷺ, முஸ்லிம் 2699)

இது கல்வி பற்றிய பேச்சின் பக்கம் நம்மைத் திருப்புகிறது. குர்ஆனில் அதிக இடங்களில் இதைப் பற்றி அல்லாஹ் கூறியிருக்கிறான்.

هَلْ يَسْتَوِي الَّذِينَ يَعْلَمُونَ وَالَّذِينَ لَا يَعْلَمُونَ

கல்வி உள்ளவர்களும் கல்வி இல்லாதவர்களும் சமமாவார்களா? (குர்ஆன் 39:9)

يَرْفَعِ اللَّهُ الَّذِينَ آمَنُوا مِنْكُمْ وَالَّذِينَ أُوتُوا الْعِلْمَ دَرَجَاتٍ

உங்களில் நம்பிக்கைகொண்டவர்களுக்கும், கல்வி கொடுக்கப் பட்டவர்களுக்கும் அல்லாஹ் பதவிகளை உயர்த்துவான்.. (குர்ஆன் 58:11)

கல்வி என்பது என்ன? கல்வி பெற்று, அதன்படி நடந்தவர்களையும் அவர்களைப் பின்பற்றியவர்களையும் அல்லாஹ் புகழ்கிறானே, அந்தக் கல்விதான் எது?

இமாம் இப்னுல் கய்யிம் அல்ஜவ்ஸியய்யா[7] ﷺ இதற்குப் பதில் சொல்கிறார்கள்:

---

7 இப்னுல் கய்யிம்: முஹம்மது இப்னு அபூபக்ர் என்பது இயற்பெயர். ஹிஜ்ரீ 691 (கி.பி. 1292) ஸஃபர் 7 அன்று டமாஸ்கஸில் பிறப்பு. ஏழு வயதிலிருந்தே அறிஞர் களின் சபைகளில் கல்வி தேடி அமர்ந்தார்கள். மார்க்க அறிஞராகிய தம்

5

நபித்தோழர்கள் யார்?

❊

‘மனிதர்களில் சிறந்தவர்கள் என்னுடைய தலைமுறையினரே..’

இது நபித்தோழர்கள் பலரால் அறிவிக்கப்பட்ட நபிமொழி. இன்றைய அழைப்பாளர்கள் பலர் குறிப்பிடுவதுபோல் ‘தலை முறைகளில் சிறந்தவர்கள்’ என்று சொல்லாதீர்கள். அந்த வாக்கியத் திற்கு நபிமொழியில் ஆதாரமில்லை. புகாரீ, முஸ்லிம் மற்றும் எல்லா நபிமொழித் தொகுப்புகளிலும் பதிவாகியுள்ள ஆதாரப்பூர்வமான வாக்கியம் என்னவெனில்,

خَيْرُ النَّاسِ قَرْنِيْ ثُمَّ الَّذِيْنَ يَلُوْنَهُمْ ثُمَّ الَّذِيْنَ يَلُوْنَهُمْ

‘மனிதர்களில் சிறந்தவர்கள் என்னுடைய தலைமுறையினரே. பின்னர் இவர்களை அடுத்து வருபவர்கள். பின்னர் அவர்களை அடுத்து வருபவர்கள்’ என்பதுதான். (அறிவிப்பு: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது ﷺ, புகாரீ 3651)

மூன்று தலைமுறைகளில் சிறப்புக்குப் பேர் பெற்றதலையாய தலைமுறையான இந்த நபித்தோழர்களையே இமாம் இப்னுல் கய்யிம் ﷺ தம் கவிதையில் கொண்டு வருகிறார்கள். அதுவும் குர்ஆனுக்கும் நபிவழிக்கும் அடுத்து.

இப்படி அவர்கள் குறிப்பிடுவது அவர்களின் சொந்தக் கருத்தோ, அறிஞர் ஒருவரின் கண்டுபிடிப்போ, சுயமுடிவோ அல்ல. இவை அனைத்திலும் தவறுகள் உண்டாக சாத்தியமுண்டு. விரைந்தோ டும் ஒவ்வொருத்தரும் விழுவது நிச்சயம். ஏன், பல முறை விழு வார்கள் எனவும் சொல்லலாம். ஆனால், இமாம் இப்னுல் கய்யிம் ﷺ கூறியது, அல்லாஹ்வின் வேதத்தையும் நபிமொழியையும் அடிப்படையாகக் கொண்டது. குர்ஆனில் பாருங்கள். அல்லாஹ் கூறுகிறான்:

6

குழப்பங்களுக்கு ஒரே தீர்வு!

❊

இங்கு ஒரு முக்கிய விசயத்தைப் பேச வேண்டும். பல கருத்து வேறுபாடுகள், புதுப்புது சிந்தனைகள், மத்ஹபு பிரச்சினைகள், பெருகி வரும் கட்சிகள், இயக்கங்களைக் கண்டு இன்றைய முஸ்லிம் இளைஞர் குழப்பத்தில் தவிக்கிறார். அவருக்கு இதில் எந்தக் கூட்டத்தை ஆதரிப்பது என்று தெரியவில்லை.

இதற்கு ஒரு குர்ஆன் வசனத்தையும் இரண்டு நபிமொழிகளையும் கொண்டு நாம் பதில் சொல்லிவிட்டோம். இப்போது சொன்னோம் அல்லவா? மூஃமின்களின் பாதையைப் பின்பற்றுங்கள் என்று. அதுதான் இதற்குப் பதில்.

அந்த மூஃமின்கள் யார்?

அவர்களின் பாதை என்றால் இக்காலத்தில் இருப்பவர்களை அது குறிப்பிடுமா?

இல்லை, இருக்க முடியாது.

நாம் இங்கு மூஃமின்கள் எனக் கூறுவது சென்றுவிட்ட காலத்தில், முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த நபித்தோழர்களாம் அந்த நல்ல முன்னோர்களையே (அஸ்ஸலஃபுஸ்ஸாலிஹ்) ஆகும். இவர்கள் தாம் நமக்கு முன்மாதிரிகள். இவர்களையே நாம் பின்பற்ற வேண்டும். நிச்சயமாக இந்தப் பூமியில் அவர்களுக்கு இணையாக ஒருவருமில்லை.

எனவே, நமது அழைப்பின் சாரம் மூன்று தூண்களை அடிப்படையாகக் கொண்டது. ஒன்று, குர்ஆன். இரண்டாவது, நபிவழி. அடுத்து, நல்ல முன்னோர்களைப் பின்பற்றுவது.

ஒருவன், 'குர்ஆனையும் நபிவழியையும் பின்பற்றுவேன்; நபித்தோழர்களை, முன்சென்ற நல்லோர்களைப் பின்பற்றமாட்

7

ஸுன்னா அந்தஸ்து

❊

உமர் இப்னு அல்கத்தாப் அல்ஃபாரூக் ﷺ அவர்களின் ஒரு கூற்றைக் கவனியுங்கள். அவர்கள் கூறினார்கள்:

إِذَا جَادَلَكُمْ أَهْلُ الْأَهْوَاءِ وَالْبِدَعِ بِالْقُرْآنِ فَجَادِلُوهُمْ بِالسُّنَّةِ، فَإِنَّ الْقُرْآنَ حَمَّالُ وُجُوهٍ

'பித்அத்வாதிகளோ மன இச்சைக்காரர்களோ உங்களிடம் குர்ஆனைக் கொண்டு தர்க்கம் செய்தால், அவர்களிடம் நீங்கள் ஸுன்னாவைக் கொண்டு தர்க்கம் செய்யுங்கள். நிச்சயமாகக் குர்ஆன் பல அர்த்தங்களைத் தாங்கியுள்ளது. (அதில் எந்த அர்த்தம் சரி என்பதை ஸுன்னாதான் புரிய வைக்கும்.)'

உமர் ﷺ அவர்களை எது இப்படிச் சொல்ல வைத்தது? இது அல்லாஹ் தன் தூதருக்குச் சொன்னதிலிருந்து எடுக்கப்பட்ட சொல்.

وَأَنْزَلْنَا إِلَيْكَ الذِّكْرَ لِتُبَيِّنَ لِلنَّاسِ مَا نُزِّلَ إِلَيْهِمْ وَلَعَلَّهُمْ يَتَفَكَّرُونَ

(நபியே!) இந்தக் குர்ஆனை நாமே உங்கள்மீது இறக்கினோம். மனிதர்களுக்காக இறக்கப்பட்ட இதை நீங்கள் அவர்களுக்குத் தெளிவாக விளக்கிக்காட்டுங்கள். அவர்கள் கவனித்தறிந்து கொள்வார்கள். (குர்ஆன் *16:44*)

அறபு இலக்கணத்தையும் சட்டங்களையும் சீபவைஹி[13] போல் கரைத்துக் குடித்திருந்தாலும், ஒரு முஸ்லிம் நமது நபியின் வழிமுறை

---

13 சீபவைஹி (கி.பி. 760-796) - இயற்பெயர். அபூ பிஷ்ர் அம்ர் இப்னு உஸ்மான் இப்னு கன்பர் அல்பிஷ்ர். பிறந்தது ஈரான். தாய்மொழி அறபி அல்ல என்றாலும், அறபுமொழி வல்லுநர்களையே வாயடைக்க வைத்த அறபுப் பண்டிதர். அறபு இலக்கணங்கள், அதன் நுட்பங்கள், அர்த்தங்கள் அவ்வளவும் அத்துப்படி. அல்கிதாப் என்ற பெயரில் அறபு இலக்கணத்தை விளக்கும் மிகப் பெரிய பிரபல நூலை எழுதியவர். ஹிஜ்ரீ 180இல் இறந்தார்.

8

நபிவழியின் சொல் விளக்கம்

❊

அல்லாஹ் கூறுகிறான்:

وَالسَّارِقُ وَالسَّارِقَةُ فَاقْطَعُوْا أَيْدِيَهُمَا

திருடன், திருடி ஆகிய இருவரின் கைகளையும் வெட்டிவிடுங்கள். *(குர்ஆன் 5:38)*

இப்போது பாருங்கள், மொழியைக் கொண்டு மட்டும் குர்ஆனை நம்மால் விளக்கிட முடியாது என்பதற்கு இது ஓர் உதாரணம்.

மொழிப்படி பார்த்தால் 'திருடுபவர்' என்பவர் குறிப்பிட்ட இடத்திலிருந்து ஒருவரின் பொருளை எடுத்துக்கொள்பவர். அந்தப் பொருள் மதிப்புள்ளதாகவோ இல்லாமலோ இருக்கலாம். உதாரணமாக, ஒருவர் ஒரு மூட்டையோ, ரொட்டித் துண்டோ திருடியிருந்தாலும், மொழியின் பார்வையில் அவருக்குத் 'திருடர்' என்றே சொல்லப்படும். 'திருடன், திருடி ஆகியோரின் கைகளை வெட்டிவிடுங்கள்' என்கிறான் அல்லாஹ். திருடுகிற ஒவ்வொருவருக்கும் கை வெட்டப்பட வேண்டுமா? இல்லை. ஏன்?

இதற்கு யார் விளக்கம் தர வேண்டுமோ, அவர் தமது விளக்கத்தில் எந்தத் திருடருக்கு மட்டும் கை வெட்டப்பட வேண்டுமென நமக்குச் சொல்லியிருக்கிறார். விளக்கியிருப்பவர் நபி. அவர் விளக்கியது அல்லாஹ்வின் வார்த்தையை. அவர் சொன்னார்:

لاَ تُقْطَعُ يَدُ السَّارِقِ إِلاَّ فِى رُبْعِ دِينَارٍ فَصَاعِدًا

கால் தீனார் அல்லது அதற்கு மேல் திருடினாலே தவிர திருடியவரின் கை வெட்டப்படாது. *(அறிவிப்பு: ஆயிஷா ﵂, முஸ்லிம் 1684)*

எனவே, ஒருவர் கால் தீனாருக்கும் குறைவான மதிப்புடைய பொருளைத் திருடினால், மொழிப்பிரகாரம் அவர் திருடரே என்றாலும், மார்க்க வரையறைப்படி அவர் திருடராகக் கருதப்படமாட்டார்.

9

நபிவழியின் செயல் விளக்கம்

❊

அடுத்து, அந்த வசனத்தின் மற்றொரு பகுதிக்குவருவோம். 'அவர்களின் கைகளை வெட்டுங்கள்' என்கிறது அது.

மொழியின் பிரகாரம் 'கை' என்றால் என்ன?

விரல் நுனிகள் முதல் அக்குள் வரை இந்த முழுப்பகுதியும் கை எனப்படுகிறது. (ஷெய்க் தம் முழுக்கையையும் சுட்டிக்காட்டி..) இது முழுவதும் கைதான்.

வெட்டப்பட வேண்டும் என்றால் எவ்வளவு? இங்கிருந்தா? அல்லது இங்கிருந்தா? அல்லது இங்கிருந்தா?..

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் இந்த விசயத்தைத் தமது செயல்களால் நமக்கு விளக்கிக் காட்டினார்கள். திருடரின் கை இதுவரை, அதாவது மணிக்கட்டு வரை வெட்டப்பட வேண்டும் என்று நபியவர்கள் வாய்மொழியாகத் தெளிவுபடுத்திய ஆதாரப் பூர்வமான ஒரு நபிமொழிகூட நம்மிடம் இல்லை. ஆனால், அவர்களின் செயலால் இதற்கு விளக்கம் கொடுத்துள்ளார்கள். அந்தச் செயல் விளக்கத்தை நாம் எப்படி அறிந்துகொண்டோம்? நம்முடைய அஸ்ஸலஃபுஸ்ஸாலிஹ் ஆகிய நபித்தோழர்களால் தானே!

நபியின் விளக்கத்தில் இது இரண்டாவது வகை. அதாவது, செயலால் விளக்குதல்.

10

நபிவழியின் அங்கீகாரம்

❊

மூன்றாவது வகை, ஏதேனும் ஒன்றை நபி ﷺ அவர்கள் மறுக்கவோ, தடுக்கவோ செய்யாமல் அங்கிகரீப்பது. இதில் நபியவர்களின் சொல்லும் இருக்காது, செயலும் இருக்காது. மாறாக, யாரோ ஒருவர் அவர்கள் முன்பு ஒன்றைச் செய்ய, அதைப் பார்த்து அவர்கள் அமைதியாக இருந்துடுவார்கள். தாம் பார்த்த பிறகும் அதைப்பற்றி அவர்கள் எதுவும் சொல்லாமல் இருப்பதால், அச்செயல் அவர் களின் அங்கீகாரத்தைப் பெற்றுவிடுகிறது. மார்க்கத்தில் அது தடைசெய்யப்பட்டதல்ல என்றாகிவிடுகிறது.

ஆனால், ஒன்றை அவர்கள் மறுத்திருக்க, அச்செயலை அவர் களின் தோழர்களே செய்திருந்தாலும், அதை அவர்கள் தடுத்து விட்டதற்கான ஆதாரப்பூர்வ ஹதீஸ் இருக்கும்பட்சத்தில், அத்தடை உத்தரவுக்கே முன்னுரிமை கொடுக்கப்படும். அதுதான் அவர்களின் அங்கீகாரத்திற்கு உட்பட்டது என்பது விதி. இரண்டு விசயங்களைக் கொண்டு இதற்கோர் உதாரணம் தருகிறேன். அப்துல்லாஹ் இப்னு உமர் இப்னு அல்கத்தாப் ﷺ கூறுகிறார்கள்:

كُنَّا نَأْكُلُ وَنَحْنُ نَمْشِي، وَنَشْرَبُ وَنَحْنُ قِيَامٌ عَلَى عَهْدِ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ

நாங்கள் நபியவர்கள் வாழ்ந்த காலத்தில் நின்றுகொண்டு குடிப் பவர்களாக, நடந்தபடியே உண்பவர்களாக இருந்திருக்கிறோம். (ஸஹீஹு இப்னு ஹிப்பான் 5325, அஸ்ஸஹீஹா 3178)

இச்செய்தியில் அப்துல்லாஹ் இப்னு உமர் ﷺ இரண்டு விசயங்களை அறிவிக்கிறார்கள்: ஒன்று, நின்ற நிலையில் குடிப்பது. இன்னொன்று, நடந்தபடி உண்பது. இவ்விரு காரியங்களும் நபியவர்கள் வாழும் காலத்திலே நடைமுறையில் இருந்ததாக அவர்கள் கூறுகிறார்கள்.

செய்தி இதுவென்றால், இவ்விரு விசயங்களைப் பற்றி மார்க்கத் தின் தீர்ப்பு என்ன? நபி ﷺ அவர்களின் சொல், செயல், அங்கீகா

11

பல கூட்டங்கள் எப்படி உருவானார்கள்?

❊

கேள்வி என்னவெனில், இவர்கள் அனைவருமே குர்ஆன், ஸுன்னாவைச் சார்ந்திருந்தும் ஏன் பல கூட்டங்களாகப் பிரிந்தார்கள்? நான் உறுதிமொழி கொடுக்கிறேன்.

இவர்களும் குர்ஆன், ஸுன்னாவை அவற்றின் உதவி நாடி சார்ந்திருக்கவே செய்தார்கள். ஆனால், எப்படிச் சார்ந்திருந்தார்கள்? அஸ்ஸலஃபுஸ்ஸாலிஹ் எதன்மீது இருந்தார்களோ, அந்தமூன்றாவது அடிப்படை இல்லாமலே சார்ந்திருந்தார்கள். (அதாவது, மார்க்கத்தை அவர்கள் புரிந்ததுபோல் இவர்கள் புரியவில்லை.)

இங்கு இன்னொரு முக்கிய விசயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். உங்களுக்கெல்லாம் தெரியும், குர்ஆனும் ஸுன்னாவும் அல்லாஹ்வினால் பாதுகாக்கப்பட்டவை என்று. ஆனால், பாதுகாக்கப்பட்ட விதத்தில் இரண்டுக்கும் வித்தியாசம் உண்டு. முன் அட்டையிலிருந்து பின் அட்டை வரை இவ்வளவுதான் என்று ஒரே ஒரு புத்தக (முஸ்ஹஃப்) வடிவில் குர்ஆன் பாதுகாக்கப்பட்டுள்ளது. ஸுன்னாவோ அப்படியில்லை. அதன் பெரும்பாலான பகுதிகள் நூற்றுக்கணக்கான புத்தகங்களில் இருக்கின்றன. அவற்றில் ஒரு பெரும் அளவு, அதாவது ஆயிரக்கணக்கான புத்தகங்களின் அளவு, அச்சிடப்படாமல் எழுத்துப் பிரதிகளாகவே அருங்காட்சியகங்களில் முடங்கிக் கிடக்கின்றன.

இன்று அச்சிடப்பட்டு நம்மிடையே இருக்கும் புத்தகங்களிலோ, ஆதாரப்பூர்வமான நபிமொழிகள் இருப்பதுடன், பலவீனமான வையும் இருக்கின்றன. தங்களை அஸ்ஸலஃபுஸ்ஸாலிஹ் வழி முறையைப் பின்பற்றும் அஹ்லுஸ் ஸுன்னத் வல்ஜமாஅத்[18]

---

18 'அஹ்ல்' (اهل) என்றால் உடையவர்கள் எனப் பொருள். எதை உடையவர்கள் என்பதை அடுத்து வரும் வார்த்தை குறிப்பிடுகிறது. அஸ்ஸுன்னத் எனும் நபி

13

காதியானிகளின் திரிபுவாதம்

❊

இப்போது இன்றைய உதாரணம் ஒன்றையும் உங்களுக்குச் சொல்வோம். உங்களுக்குக் காதியானிகள் தெரியுமே! கேள்விப் பட்டிருப்பீர்கள். நம்மைப் போலவே 'அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை, முஹம்மது, அல்லாஹ்வின் தூதர்' என்று அவர்களும் கலிமா சொல்கிறார்கள். அன்றாடம் ஐவேளைத் தொழுகிறார்கள். ஜும்ஆ தொழுகையை நிலை நிறுத்துகிறார்கள். அல்லாஹ்வின் புனித இல்லத்தை ஹஜ்ஜும் உம்றாவும் செய்கிறார்கள். அவர்களுக்கும் நமக்கும் மத்தியில் வித்தியாசமே இல்லை. அவர்கள் முஸ்லிம்களைப் போலவே இருக்கிறார்கள்.

ஆனாலும், கொள்கை சார்ந்த பல அம்சங்களில் அவர்கள் நம்மிலிருந்து வேறுபடுகிறார்கள். உதாரணமாக, நபித்துவம் முடிந்து போகாது எனும் அவர்களின் நம்பிக்கையைக் குறிப்பிடலாம். நபி முஹம்மது ﷺ அவர்களுக்குப் பிறகும் நபிமார்கள் வருவார்கள் என்றும், அவர்களில் ஒருவர் இந்தியாவில் காதியான் எனும் ஊரில் ஏற்கனவே வந்துவிட்டார் என்றும் அவர்கள் நம்புகிறார்கள். எனவே, தங்களிடம் வந்துள்ள இந்த நபியை(?) நம்பிக்கை கொள்ளாதவர், காஃபிரே என்கிறார்கள். முஹம்மது உங்களுக்கு இறுதித்தூதர் என்று தெளிவான இறைவசனம் இருக்க, எப்படி இவர்களால் இதைக் கூற முடிகிறது? அல்லாஹ் கூறுகிறான்,

مَا كَانَ مُحَمَّدٌ أَبَا أَحَدٍ مِّنْ رِّجَالِكُمْ وَلَكِنْ رَّسُولَ اللَّهِ وَخَاتَمَ النَّبِيِّيْنَ

முஹம்மது உங்கள் ஆண்களில் ஒருவருக்கும் தந்தையாக இருக்க வில்லை. அவரோ அல்லாஹ்வுடைய தூதராகவும், நபிமார்களுக்கு (இறுதி) முத்திரையாகவும் இருக்கிறார். (குர்ஆன் 33:40)

لاَ نَبِيَّ بَعْدِى